LIBRARY
6 DEC 1963
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 8th March 1963

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

உணவு கலப்படத் தடைச்சட்டம் (லைசென்ஸ் தொகை விதிப்பு

* குறுகிய கால கேள்வி எண் 1.— **திருமதி ராஜாத்தி குஞ்சித பாதம்:** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கத்தின், உணவு கலப்பட தடைச் சட்டத்தின்கீழ், இட்லி, தோசை சுட்டு விற்றுப் பிழைக்கும், ஏழைப்பெண்களும், சோடா கலர் போன்ற பானவகைகள் வைத்து விற்கும், சிறு பெட்டிக் கடைக்காரர்களும் லைசென்சு தொகை கட்டவேண்டிய கட்டாயத்தில் அதிக அவதியுறுகிறுர் கள் என்பதை அரசாங்கம் அறியுமா ?

(இ) இவர்களுக்கு லைசென்சு கட்டணத்திலிருந்து விதி விலக்கு அளிக்க, அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்கு தெரி வித்து வேண்டியன செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(இ) இல்லை.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: தலைவர் அவர்களே, ஹோட்டல் சாப்பாடு வயிற்றுக்கு ஒத்துக்கொள்ளாத காரணத் தினுல் வெளியூரில் வேலையாக இருக்கிறவர்கள் வீட்டுச் சாப்பாட்டை, பானைச் சோற்றை விரும்புகிறுர்கள். இப்படி வீட்டுச் சாப்பாடு போடுகிறவர்களுக்காவது லைசென்சு என்று இல்லாமல் இருந்தால் நலமாக இருக்கும். இவர்களுக்கும் லைசென்சு இருப்பதனுல் கஷ்டப்படுகிறுர்கள். வெளியூரில் உள்ளவர் களுடைய வயிற்று நலனை உத்தேசித்தாவது இப்படிச் சிறு வியா பாரம் செய்கின்றவர்களுக்கு விலக்கு அளிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், மத்திய அரசாங் கச் சட்டத்தின்கீழ் 24-வது பிரிவுப்படி 3 ரூபாய் ஃபர்ஸ்ட் லைசென்சு ஃபீ என்றும், பின்னர் ரின்யூவலுக்கு 1 ரூபாய் என்றும் வசூலிக்கப்படுகிறது. இதை நானும் ஒன்றும் பண்ணுவதற்கில்லை.

[8th March 1963

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தெருவில் கடை வைத்து விற்கின்ற ஏழை எளிய ஆப்பக்காரர்களிடமும் கூட பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் வரி விதிக்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதையாவது தள்ளுபடி செய்ய அரசாங்கம் முன் வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவர்கள் தனியாக வரி போடுவது இல்லை. இந்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படுகிற வரி தான் பஞ்சாயத்து மூலமாக வசூலிக்கப்படுகிறது.

திரு. கே. மூக்கைய தேவர் : சார், கலப்படச் சட்டத்தின்கீழ் சோடா புட்டிகளை விற்கின்ற புட்டிக்கடைக்காரர்களும் தண்டிக்கப்படுகிறார்கள். சோடா கலர் தயாரிக்கக்கூடிய ஸ்தாபனம் கலப்படம் செய்யலாமே தவிர இவர்கள் கலப்படம் செய்ய வழியில்லாததனால் இவர்களை அக்குற்றத்திற்காகத் தண்டிக்காது இருக்க வழிவகை செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ரீடைல் டீலர்களும் இந்தச் சட்டத்தின் கீழ் வருகிற காரணத்தினால் இவர்களும் தண்டிக்கப்படுகிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : கலப்படச் சட்டத்தின்கீழ் விற்பனை செய்கின்றவர்களைக் காட்டிலும் உற்பத்தி செய்கின்றவர்களை, உற்பத்தி செய்கின்ற இடத்தில் பிடித்துத் தண்டிப்பது தான் பொருத்தமாக இருக்கும். ஆகவே சோடா புட்டி விற்கின்றவர்களைத் தண்டிக்காமல், சோடா புட்டி உற்பத்தி செய்கின்றவர்களையே தண்டிக்க வழிவகை செய்யக்கூடிய அளவில் சட்டத்தில் மாறுதல் செய்ய நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை தெரிவிக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ரீடைல் டீலர்கள் எந்த எந்த ஸ்தாபனத்திடம் வாங்கி விற்கிறார்கள் என்று தெரியாத காரணத்தினால் இப்படி இருப்பதனால் இவர்களே நல்ல உற்பத்தியாளரிடம் நல்ல சரக்கையே வாங்கி விற்க வழியேற்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : வேறு பொருள்களை விற்கின்றவர்கள் என்றால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் சோடா பாட்டில் விற்கின்றவர்களால் கலப்படம் பண்ண முடியாது. ஆகவே எங்கு உற்பத்தி செய்யப்படுகிறதோ அங்கேயே கலப்படம் செய்கின்றவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வழி செய்யப்படுமா? புட்டிக் கடைக்காரர்களுக்கு தண்டனை இல்லாது செய்ய முயற்சி செய்யப்படுமா?

கனம் சபாநாயகர் : முடியாது என்று எப்படிச் சொல்ல முடியும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்தக் கோரிக்கை வந்திருக்கிறது. அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

8th March 1963]

திரு. டி. கார்ச்சா கவுடர் : சிறு கடைக்காரர்கள் பள்ளிக்கூடங்களுக்கு முன்னுல் ஈ மொய்த்த பண்டங்களை வைத்துக்கொண்டு விற்பதனுல், அதை வாங்கி உண்ணுகின்ற மாணவர்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. ஆகவே அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்கெல்லாம் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறுர்கள்.

கம்யூனிஸ்டு கட்சி காரியாலயங்கள்

* 153 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அவசரச் சட்டம் பிரகடனம் செய்த பிறகு தமிழ் நாட்டிலுள்ள அனேக கம்யூனிஸ்ட் கட்சி காரியாலயங்கள் போலீசாரால் பரிசோதிக்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : In November 1962, Communist Party Offices at Madurai, Salem, Tirunelveli and Tiruchirappalli were searched by the Police.

திரு. கரு. சீமைச்சாமி : போலீசார் சோதனையிட்டதில் பாரதத்தைப் பாதிக்கும் விதத்தில் ஏதாவது ரெகார்டுகள் கைப்பற்றப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றியெல்லாம் தகவல் கொடுப்பது உசிதம் அல்ல.

திரு. கரு. சீமைச்சாமி : அவர்களுடைய கட்டிடத்தில் சீனப் பிரதமர் சூயென்லாயின் படம் மாட்டப்பட்டிருந்தது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதை அகற்ற உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னுடைய கவனத்திற்கு வந்தபோது அது எடுக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டது. ஏதோ தொழிலாளர்கள் சங்கத்தில் அது முதலில் மாட்டப்பட்டிருந்தது என்ற தகவல் வந்திருக்கிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Was any prohibitive literature found when the search was made by the Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I think the hon. Member knows Tamil also. I have just now answered in Tamil that it would not be right for me to disclose particulars about all these things.

திரு. ஜே. மாதா கவுடர் : இன்றைக்கு கம்யூனிஸ்டு கட்சியின் செயல்களைக் காட்டிலும் சுதந்திராக் கட்சியின் பிரசாரம் பாரதத்திற்குப் பெரும் தீங்கை விளைவித்துக்கொண்டிருக்கிறது என்ற காரணத்தினுல் அவர்களுடைய காரியாலயம் முதலில்